RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222929

OPEN ACCESS

# சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் - தனி மனித உளவியல் நோக்கு

**மு. சங்கர்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626130, தமிழ்நாடு, இந்தியா.

# Sangam Literary Poems on Kurinji land - An Individual Psychological Perspective

**M. Sankar** [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi-626130, Tamil Nadu, India

* Corresponding Author: sankartamilskcgri@gmail.com

Received: 26-09-2022
Revised: 23-11-2022
Accepted: 29-11-2022
Published: 05-12-2022

## ABSTRACT

Kurinji is one of the five land parts of Tamil people. But Tolkappiyam puts Mullai as the first and Kurinji as the second, while firing Kurinji land sexuality (Tol. Meaning. Akat. 15) is fired as first. The reason behind it is Mayon because Mayon is the god who protects the land (the world) and sex belongs to all lands but is considered to be specially cherished in Kurinji region. However, man's first life begins in the mountains. Therefore, Kurinji is the first and foremost of the five landforms. It is well known that Kurinji is a mountain and hilly area. But, it is said that the name of this place came from the flower. This Kurinji plant can be found at more than six thousand feet above sea level, hence the region is named as Kurinji. Apart from that, the flower of this plant blooms only once in twelve years. Due to the absence of such a surprising flower in nature, this name is appropriate for a mountainous place. Kurinjinilam, Kudirkalam and Yamam (Kangul) are necessary for the meeting of lovers and it is described well in Sangam literary index poems. The number of Sangam Literary Index poems is 488. These are respectively 131 poems in Natrinai, 147 poems in Kurundogai, 100 poems in Ainkurunuru, 80 poems in Akananuru, 29 poems in Kalithogai and 1 poem in Patuppattu. The main purpose of this article is to study these poems from the perspective of human psychology.

**Keywords:** Kurinji, Sangam Literature, Mayon, Psychology

## முன்னுரை

சங்க இலக்கியக் கவிதைகளை உளவியல் நோக்கில் ஆராய்ந்துள்ள சில ஆய்வுகளை இவண் குறிப்பிடுவது சாலச் சிறந்தது. தமிழண்ணல் ஒப்பிலக்கிய அறிமுகம் (1973) என்ற நூலில் ரெனிவெல்லக் கூறும் 1. படைப்பாளி உளவியல் 2. படைப்பாக்க உளவியல் 3. இலக்கியம் அளிக்கும் உளவியல் 4. அவையினர் உளவியல் என்ற நான்கினைச் சுட்டிக்காட்டி, குறிஞ்சிப்பாட்டு முழுவதும் உளவியல் அடிப்படையில் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டி, குறிஞ்சிப்பாட்டை ஓர் உளவியல் பாட்டு என்றும் கூறலாம் என்பதையும் விளக்கிக் காட்டுகின்றார். சங்க இலக்கியத்தில் உளவியலைப் பொருத்திப் பார்த்தவர்களுள் ந.சேஷாத்திரி குறிப்பிடத்தக்கவர். இவ்வாய்வு சென்னைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டப் பேற்றிற்காக 1986 இல் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாய்வு நூல் உளவியல் பற்றிய மேனாட்டார் விளக்கம், உள்ளம், நெஞ்சம், மனம் பற்றிய கருத்துக்கள், உளவியல் கருத்தேற்றம், இயல்பூக்கம், விடுப்பூக்கம் மற்றும் சமூக இயல்பூக்கம், உளவியல் முறை, பிறழ்நிலை உளவியல்

கருத்துக்கள், ஆளுமைக் கோட்பாடு, சமூக உளவியல் செய்திகள் எனப் பல்வேறு உளவியல் தன்மைகளை எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியத்தில் உளவியல் என்ற தலைப்பில் து.சிவராஜ் என்பவர் 1994 இல் சிவம் பதிப்பகம் வாயிலாக நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். சங்க இலக்கிய அகப்பொருளைப் பொதுநிலையில் ஆராய்ந்தவர் வ.சுப.மாணிக்கம் ஆவார். இவர் தம் தமிழ்க் காதல் (2009) எனும் ஆய்வு நூலில் ஒரு படைப்பாளி மக்களை முதன்மையாகக் கொண்டும் இயற்கையைத் துணைமையாகக் கொண்டும் எங்ஙனம் படைப்பை உருவாக்குகின்றான் என்பதைப் படைப்பாக்க உளவியல் நோக்கில் ஆராய்ந்துள்ளார். சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளைப் பன்முகப் பார்வையில் பெரு. தியாகராசன் (2012) ஆராய்ந்துள்ளார். அவற்றுள் ஓர் இயலாக உளவியலை அமைத்துள்ளார் என்பதும் இவண் நினைவுகூரத்தக்கது. படைப்பாளி உளவியல் நோக்கில் ஔவையின் உளவியல் மற்றும் ப்ராய்டு - லெக்கானின் மன அலசல் என்ற தலைப்பில் ஐ.க.பாண்டியன் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இதில் சங்க கால ஔவையிடம் காணப்பட்ட தன்னிலை மிகு உணர்ச்சியைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி ஆராய்ந்துள்ளார். அக இலக்கணங் காட்டும் உளவியற் கூறுகள் என்ற தலைப்பில் த.கவிதா கரந்தைக் கலைக் கல்லூரியில் முனைவர் பட்டத்திற்கு (2010) ஆய்வு செய்துள்ளார். இவ்வாய்வு நூல் 1. அக இலக்கணம் அறிமுகம் 2. அக இலக்கணமும் உளவியலும் 3. அக இலக்கணமும் மனவெழுச்சியும் 4. அக இலக்கணமும் சமூக உளவியலும் 5. அக இலக்கணமும் பொருத்தப்பாட்டுச் சிக்கல்களும் உள்ளிட்ட இயல்களைக் கொண்டமைக்கின்றது.

தொல்காப்பியமும் ஃப்ராய்டியமும் அழகியல் இணைநிலைகள் (2011) என்ற நூலில் தி.கு.இரவிச்சந்திரன் தொல்காப்பியம் குறிப்பிடும் குறிப்புப் பொருட்களான உள்ளுறை, இறைச்சி பற்றியும் அவற்றின் உளச்செயல்பாடுகள் பற்றியும் தொல்காப்பியத்தில் இடம்பெறும் ஃப்ராய்டிய அழகியல் பற்றியும் விரிவாக ஆய்ந்துள்ளார். மா.அமுதா (2014) சங்க இலக்கிய வாயில் துறைப் பாடல்களை உளவியல் நோக்கில் ஆராய்ந்துள்ளார் (Amutha, 2014). இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் எனும் நூலில் செ.சாரதாம்பாள் (2017) நெஞ்சொடு கிளத்தலையும் கலித்தொகையில் இடம்பெறும் கனவையும் மடலேறுதலையும் உளவியல் நோக்கில் ஆராய்ந்துள்ளார் என்பதும் ஈண்டு நினைத்தற்குரியது (Saradhambal, 2017). சங்க இலக்கியக் கவிதைகளை நடத்தை உளவியல் அடிப்படையில் கோவிந்தசாமி இராசகோபால் (2015) ஆராய்ந்துள்ளார் (Govindasamy Rajagopal, 2015). இவ்வாய்வுகள் எல்லாம் உளவியல் நோக்கில் சங்க இலக்கியக் கவிதைகளைப் பொதுநிலையிலும் கோட்பாட்டு நிலையிலும் ஆராய்ந்துள்ளமை வெளிப்படை. இவ்வாய்வுகளெல்லாம், திணை அடிப்படையில் உளவியல் கூறுகளை ஆராயமுற்படவில்லை என்ற காரணத்தினால், இக்கட்டுரை சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் காணலாகும் தனி மனித உளவியல் கூறுகளை (Human Psychology) ஆராயமுற்படுகின்றது.

## உளவியல் - அறிமுகம்

மனிதனின் உள்ளத்தைப் பற்றி ஆராயும் அறிவியலே உளவியல். இது மனிதனின் நடத்தை முறைகளைக் காரண, காரியத்தோடு ஆராய்கின்றது. கி.பி.19 ஆம் நூற்றாண்டில்தான் உளவியல் தனியொரு துறையாக மலர்ந்தது. அதற்கு முன்பு தத்துவவியலின் ஒரு பிரிவாகவே உளவியல் திகழ்ந்தது. உள்ளம், அகம், மனம், நெஞ்சு என்பன ஒரு பொருள் குறித்த சொற்கள். தொடக்கத்தில் உளவியலார் மனித மனச் செயல்பாடுகளையும் நடத்தைகளையும் நடத்தை மாறுபாடுகளையும் விளக்கும் ஆராய்ச்சியில் இறங்கினர். சுருங்கக்கூறின், உளவியல் என்பது மனிதனின் உள்ளச் செயல்பாடுகளை ஆராய்வதாகும். இவ்வாராய்ச்சியில் சிக்மண்ட் ஃபிராய்டு, காரல் குஸ்தவ் யுங், லக்கான், ஆல்பிரட் அட்லர், எரிக்.எச்.எரிக்சன், சலீவான், கேரன் ஆர்ன் உள்ளிட்டோர் இறங்கினர். இவர்கள் மனிதனின் தன்முனைப்பு மனம், நடத்தை முறை, மன எழுச்சி, உணர்வு வயப்படுதல், கனவு, பரிவுணர்வு, பாலியல் மனநிலை, பாலுணர்வு முதலியவற்றைக் கருவாகக் கொண்டு ஆராய்ந்தனர். சங்க அகக் கவிதைகள் தன்னுணர்ச்சியின் வெளிப்பாடுகளாக அமைந்தவை. ஆதலால், இக்கவிதைகளுள் தனி மனிதனின் உள்ளச் செயல்பாடுகளையும் நடத்தை முறைகளையும் காணலாம்.

## பிறழ்வு நடத்தை

மனிதனின் இயல்பான நடத்தையில் இருந்து மாறுபட்டுக் காணப்படும் நடத்தையே பிறழ்வு நடத்தை ஆகும். பாலியல் தவிப்பின் காரணமாக இப்பிறழ்வு நடத்தை ஏற்படுகின்றது. மருத்துவத் தந்தை எனப் போற்றப்படும் இப்போ கிரேடஸ் மனித உடலில் நால்வகை இயல்புகள் இருப்பதாகக் கூறினார். இவற்றுள் சிறுமாறுபாடு ஏற்பட்டாலும் மனநிலை பிறழும் என்று நம்பினார். மனநோய்க்குக் கடவுளின் சீற்றம் காரணம் இல்லையென்றும் கூறினார் என ந.சேஷாத்திரி தமது ஆய்வேட்டில் எடுத்தாண்டுள்ளார். இதனைத் தொல்காப்பியம் குறிப்பிடும் பெருந்திணையின் ஏறிய மடல்திறம் என்பதோடு தொடர்புபடுத்தலாம். பரணரின் கவிதை ஒன்றில் இதனைக் காணலாம். ஆராக் காமம் அடூஉநின் றலைப்ப/ இறுவரை வீழ்நரின் நடுங்கித் தெறுவரப்/ பாம்பு எறி கோலின் தமிய வைகித்/ தேம்புதி கொல்லோ நெஞ்சே (அகம்.322) என்று அல்லகுறிப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறும் பாங்கில் அமைந்த இந்தக் கவிதையில் பிறழ்வு நடத்தையைக் காணலாம்.

## விலங்குகளின் நடத்தை வழி மனிதனின் செயல்பாடும்

சங்கப் புலவர்கள் விலங்குகளின் நடத்தை வழி மனிதனின் செயல்பாட்டைச் சித்தரித்துக் காட்டியுள்ளனர். இதனை உள்ளுறை, இறைச்சி அமைந்த கவிதைகளில் காணலாம். சங்கக் குறிஞ்சித்திணையில் ஒரு காட்சி. ஆண் யானையும் பெண் யானையும் மலைப்பக்கமாக உணவு தேடிச் செல்கின்றன. அப்போது ஓரிடத்தில் சுரபுன்னை மரங்களும் வாழை மரங்களும் நிறைந்த மலைச்சாரலில் அவற்றை விரும்பி உண்ணும் பொருட்டு மகிழ்ச்சியில் அறியாது அங்கிருந்த பள்ளத்தில் விழுந்தது. இப்பள்ளம் செங்குத்தானது. அதனால் ஏற முடியவில்லை. அப்போது பெண் யானை தன் ஆண் யானை ஏறும் பொருட்டு அங்கிருந்த மரக்கிளைகளை முறித்து அப்பள்ளத்தில் போட்டு ஏறி வருவதற்கு ஏற்றாற் போலப் படிகள் போல அமைத்தது. இதில் ஆண் யானையின் மீது பெண் யானை கொண்ட அன்பு புலனாகின்றது. இதனைப் பெருங்குன்றூர் கிழார் குறிப்பிடுகையில், கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு/ வாழை யோங்கிய தாழ்கண் அசும்பில்/ படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்/ பிடிபடி முறுக்கியபெருமரப் பூசல் (அகம்.8) என்கின்றார். இதில் களிறாகிய ஆண் யானை - தலைமகன். வாழை - புணர்ச்சியின்பம். காதல் வாழ்வில் புணர்ச்சி மிகுந்து ஓடும் தலைமகன் ஆண் யானையைப் போன்று பள்ளத்தில் விழக்கூடும். இதில் காதலை நுகர மாட்டாது தவிக்கும் நிலைமையைக் காணலாம். மற்றொரு கவிதையில், இரவுக்குறி வந்த தலைமகன் தலைமகளைக் காணவியலாது திரும்புகின்றான். மறுநாள் இரவு தலைமகளின் இல்லத்தருகே வந்து நிற்கின்றான். அதனைக் கண்ட தோழி பின்வருமாறு குறிப்பிடுகின்றாள். மென்தினை மேய்ந்த தறுகட் பன்றி/ வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்/ எந்தை அறிதல் அஞ்சிக்கொல்/ அதுவே மன்ற வாரா மையே (ஐங்.261) இதில் தாம் விரும்பிய காமவின்பத்தை நுகர்ந்து இனிது உறங்குவதல்லது தன் தலைமைப் பண்புக்கு ஏற்ப விரைவில் வரைதற்குரியன செய்யலன் தலைமகன் என்ற உள்ளுறையை அமைக்கின்றாள் தோழி.

## கனவு

கனவு என்பது கட்டுக்கடங்காத உணர்ச்சிகளின் அமுக்கப்பட்ட வேட்டைகள், கனவுகளில் நிறைவு காணத் துடிப்பதால் அவை வரம்பற்று வெளிப்படுகின்றன. இதனால் விழிப்பு நிலையில் நம்பத்தகாதவை எல்லாம் கனவுகளில் வெளிப்படுகின்றன எனக் கனவு பற்றித் தி.கு.இரவிச்சந்திரன் குறிப்பிடுகின்றார் (Ravichandran, 2015). பிராய்டும் கனவின் பொருளைப் பற்றிச் சொல்லும்போது, கனவு உள்ளார்ந்த உடபொருளையும் சுட்டும் என்பர் (Saradhambal, 1999). இக்கனவு ஆழ்மன உணர்வுகளையும் விருப்பத்தையும் பாதிக்கின்றது. சங்க காலத்தில் கனவு முன்னுணர்த்தல் உத்தியாகப் புலவர்களால் கையாளப்பட்டுள்ளது. இக்கனவு உளச் செயல்பாடாகவே அமைந்துள்ளது. தனக்குத் தானே செய்தியைத் தெரிவித்துக் கொள்ள கனவு பயன்படுகின்றது. சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகளிலும் கனவின் தன்மைகளைக் காணலாம்.

## தவிப்புக் கனவு

தலைமகளின் மெலிவிற்குக் காரணங் கேட்ட தலைமகனுக்குத் தோழி தலைமகள் கண்ட கனவினைக் கூறுகின்றாள். மின்னவிர் வயங்கிழை நெகிழச் சாஅய்/ நன்னுதல் பசத்தல் ஆவது துன்னிக்/ கனவிற் காணு மிவளே/ நனவில் காணாள் நின் மார்பின் தெய்யோ (ஐங்.234) இதனை உளவியலார் தவிப்புக் கனவு என்கின்றனர். தலைமகளின் கனவு, நனவு என்ற மனப் போராட்டத்தை இக்கவிதையில் காணலாம். இவற்றைச் சிக்மண்ட் ஃபிராய்டு நனவிலி மனம், நனவு மனம் என்பார். உளவியலார் வளர் இளம் பருவத்தில் பாலியல் எண்ணங்களும் கனவுகளும் அடிக்கடி தோன்றும் என்கின்றனர் (Mariya Sepasthiyan, 2013). இதனை, நனவில் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ/ நனவில் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே/ கனவில் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ (கலித்.39) என்ற அடிகளில் காணலாம். இதில் தலைமகள் தலைமகனுடன் கூடுவது போன்ற பாலுணர்ச்சிகள் அல்லது பாலியல் விருப்பங்கள் கனவின் மூலம் வெளிப்படுகின்றன.

## யானையின் கனவு

கனவு மாந்தர்க்கு மட்டும் உரித்தன்று அஃறிணையுயிர்களுக்கும் உண்டு என்பதைக் கபிலர் யானை கனவு காண்பதாகக் கலித்தொகை - 49 இல் குறிப்பிடுகின்றார். இக்கனவு அச்சவுணர்வின் காரணமாக வெளிப்படுகின்றது. கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு/ நெடுவரை மருங்கின் துஞ்சும் யானை/ நனவில் தான் செய்தது மனத்தது ஆகலின்/ கனவில் கண்டு கதுமென வெரீஇ/ புதுவதாக மலர்ந்த வேங்கையை/ அதுவென உணர்ந்து அதன் அணி நலம் முருக்கி/ பேணா முன்பின் தன் சினம் தணிந்து அம்மரம்/ காணும் பொழுதின் நோக்கல் செல்லாது/ நாணி இறைஞ்சும் நன்மலை நல்நாட (கலித்.49).

## அச்சவுணர்வு

நினைவிலி மனத்தின் அடித்தளத்தே ஆசைகள் புதையுண்டு கிடப்பதைப் போன்று அச்சவுணர்வும் மறைந்துள்ளது. குறிஞ்சிப் புலவர்கள் இதையும் பகுத்தாய்ந்துள்ளனர் (Thiyagarajan, 2012). தலைமகன் இரவுப் பொழுதில் வருவதால் ஏற்படும் ஏதம் பற்றித் தலைமகள் அச்சம் கொள்வதைக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் காணலாம். இதற்குக் காரணம் தலைமகள் இளமை முதலே உள்ளத்தில் அமைந்திருந்த அச்சவுணர்வே இவளை எதிலும் பயங்கொள்ளச் செய்கின்றது. பெருங்களிறு உழுவை தாக்கலின் இரும்பிடிக்/ கருவிமா மழையின் அரவம் அஞ்சுபு/ போதேர் உண்கண் கலுழவும் ஏதில்/ பேதை நெஞ்சம் கவலை கவற்ற (நற்.144) இதில் தலைமகளின் அச்சவுணர்வைக் காணலாம்.

## பாலுணர்வு

மனிதனின் அகச்செயலுக்கு அடிப்படையாக அமைவது பாலுணர்வாகும். இது பற்றி சிக்மண்ட் ஃபிராய்டு குறிப்பிடுகையில், மனிதனின் உள வாழ்வுக்குப் பாலுணர்வே ஆதாரமாகும். அவனின் குடும்ப உறவுகள் (family relations), சமுதாய உறவுகள் (social relations) ஆகிய அனைத்தும் பாலுணர்வின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன என்கின்றார் (Ravichandran, 2015). சங்கக் குறிஞ்சித்திணையில் பாலியற் காதலின் இயல்பையும் தன்மையையும் அக்காதல் வயப்பட்டோரின் செயல்பாடுகளையும் காணலாம். காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்/ கருவி மாமழை வீழ்ந்தென அருவி/ விடரகத் தியம்பும் நாட (குறுந்.42) இதில் காமம் என்பது உடலுறவைச் சுட்டுகின்றது. மனிதனின் இயல்பு உணர்ச்சிகளுள் ஒன்றே காமம். இதனைப் பாலியல் உந்துதல் என்றும் கூறலாம். சங்கப் புலவர்கள் குறிஞ்சித்திணையில் பாலியல் வேட்கை பற்றியும் புணர்ச்சி இன்பம் பற்றியும் சித்தரித்துள்ளனர். காமம் காமம் என்ப காமம்/ அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்/ கடுத்தலும் தணிதலும் இன்றே யானை/ குளகு மென்றாள் மதம் போலப்/ பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே (குறுந்.136). பாலியல் காதலில் அதனை நினைப்பவர் இன்பம் என்று கருதினால் இன்பம் பயக்கும். அதுவே துன்பம் என்று

கருதினால் துன்பமும் பயக்கும். இன்பமும் துன்பமும் மனதின் செயல்பாடுகளே. எனவே, பாலியல் காதலை நினைப்பவரின் தன்மைக்கேற்ப இன்பமும் துன்பமும் ஏற்படுகின்றது என்பதை மேற்குறிப்பிட்ட குறுந்தொகைக் குறிஞ்சிக்கவிதை உணர்த்துகின்றது. தண்ணீரில் இறங்கி குவளை மலர்களைக் கொய்பவர்கள் நீர் வேட்கையால் தவிப்பது போல நாள்தோறும் காதலர் தோள்களை வைகி இன்புற்றாலும் மேலும் தழுவ வேண்டும் என்ற வேட்கை அவர்களது மனதில் ஏற்படும். இதனை, குவளை குறுநர் நீர்வேட் டாங்கு/ நாளும் நாளுடன் கலவவுந் தோளே/ தொன்னிலை வழீஇயநின் தொடியென (நற்.332) என்ற அடிகளில் காணலாம். சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் இடம்பெறும் பாலுணர்வுக்கு அடிப்படை தூண்டல், ஈர்ப்பு, உந்துதல் எனும் பாலியல் புறநிலைக் கூறுகளே (Sexual Objects) ஆகும். பாலுணர்வு என்பது உடல் சார்ந்ததாக அமைகின்றது என்றாலும் உளம் சார்ந்ததாகவும் உள்ளது.

## பாலியல் உறவு

பிராய்டு போன்ற உளவியல் அறிஞர்கள் பாலியல் உறவு பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக, அவை மனிதனின் பாலியல் வளர்ச்சியை விளக்குவனவாக உள்ளன. ஆண், பெண் என்ற வேறுபாடே பாலியல் உறவிற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. எனவே, பாலியல் உறவு தவிர்க்கப்பட வேண்டியதாக அன்றைய சமுதாயத்தில் கருதப்படவில்லை. “சங்க காலத்தில் பாலுறவானது தவிர்க்கப்பட வேண்டியதாகவோ, மறுக்கப்பட வேண்டியதாகவோ அல்லது மறைக்கப்பட வேண்டியதாகவோ கட்டமைக்கப்படவில்லை. காமமானது உய்த்துணர வேண்டியதாக வரையறுக்கப்பட்டிருந்தது” (Mariya Sepasthiyan, 2013) என்ற மரிய செபஸ்தியானின் கூற்றுப் பழந்தமிழரின் பாலியல் உறவை விளக்குகின்றது. காமத்தை அனுபவிப்பதற்கான பருவம் குமரப்பருவம் ஆகும். அப்பருவத்தில் காதலர்களிடையே காணப்படும் உள்ளப் புணர்ச்சி மெய்யுறு புணர்ச்சிக்கு அழைத்துச் செல்கின்றது. இதனை, அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன/ நகைப்பொலிந் திலங்கும் எயிறுகெழு துவர்வாய்/ மாயிதழ் மழைக்கண் மாஅயோளொடு/ பேயும் அறியா மறையமை புணர்ச்சி (அகம்.62) என்ற அடிகளில் காணலாம். இதில் தலைமகன் பேயும் அறியாப் பொழுதில் தலைமகளுடன் கொண்ட பாலியலுறவு வெளிப்படுகின்றது.

## மரபுசார் நடத்தை முறை

தொடக்கத்தில் உளவியலார் மனித நடத்தைப் பற்றி ஆராய முற்பட்டனர். மனிதனின் அன்பு, காதல், பாலியல் உந்துதல் போன்றவை மனிதனின் நடத்தைகளோடு தொடர்புடையவை. இவற்றுள் ஒன்றே மரபுசார் நடத்தை என்பது. மரபுசார் நடத்தை என்பது சமூக அமைப்பிற்கேற்ப வாழ்வதைக் குறிக்கும். இது பற்றி, து.சீனிச்சாமி குறிப்பிடுகையில், “தமிழ்ச் சமூக அமைப்பில் பழைய மரபுக்கேற்ப வாழ்தல் என்பது சாதி அமைப்பிற்கேற்ப வாழ்வதேயாகும்” என்கின்றார் (Seenisami, 2004). இதில் சாதியமைப்பே மரபுசார் நடத்தை முறையாகக் கருதப்படுகின்றது. சாதி அமைப்பிற்கேற்ப மனிதன் வாழ்வதே மரபுசார் நடத்தை எனலாம். சங்கக் குறிஞ்சித்திணையில் இந்நிலையைக் காணலாம். நற்றிணை 276-ஆம் கவிதை வேட்டுவ மகளிரையும் குறவர் மகளிரையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. காம்பினை ஊதி ஒலித்தும் கொல்லும் இயல்புடைய வேட்டை நாயுடன் காட்டில் இரை தேர்ந்து தளரும் வலிமையான விலங்குகளை வேட்டையில் பற்றியும் வாழும் இயல்புடைய வேட்டுவர் தம் மகளிர் என்றாய். ஆனால், யாம் குறவர் மகளிரேம், மலை வாழ் கொடிச்சியரேம் என்று கூறுவதாக அமைந்த கவிதை வருமாறு:- கோடு துவையா கோள் வாய் நாயொடு/ காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு/ வாயவ் மகளிர் என்றி ஆயின்/ குறவர் மகளிரேம் குன்று கெழு கொடிச்சியேம் (நற்.276).

## நனவோடை உத்தி

உள்ளத்தின் போக்கை நுணுக்கமாக ஆராயும்போது பல உளவியல் கோணங்கள் வெளிப்படும். அவற்றுள் ஒன்றே நனவோடை. இது இறந்த காலத்தை நினைத்துப் பார்த்தலாகும். கதை மாந்தரின்

தொடர்பற்ற எண்ண அலைகளை நனவோடையாகக் கருதலாம். நனவுடை மனத்தோடு நனவிலி மனம் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது. பொதுமையிலிருந்து தூலப்படுத்துதலை நோக்கி அது தொடர்ந்து தாவுகிறது. அதன்போது தூலமான அற்பங்களை அது காண்கிறது. இத்தகைய நனவிலி மனம், ஒரே நேர்கோட்டில் அமைவதில்லை. ஒன்றனைத் தொட்டு ஒன்று படர்வதாக அமைகிற அதன் பண்புகளின் பின்னணியில், அதனோடு தொடர்ந்து போராடுகிற நனவுடை மனத்தின் நானாவித இயங்கு திசைகளைச் சித்திரிப்பது நனவோடை உத்தி ஆகும். நனவோடை என்பது கதைமாந்தரின் உளவியல் வாழ்க்கையையும் அதன் முனைப்புக்களையும் அவற்றின் போக்கிலேயே சென்று சித்தரிக்கின்றது. நிகழ்ச்சிகளையும் அனுபவங்களையும் சொல்லுகின்றபோது அவற்றை அவற்றின் நேர்வரிசை முறையில் அல்லாமல் அவை உணரப்படுகின்ற முறையில், ஒன்றனைத் தொட்டு ஒன்று தாவியும் உருண்டும் போகிற முறையில் சொல்லுகிறது இவ்வுத்தி முறை என்று நனவோடையை விளக்குகின்றார் தி.சு.நடராசன் (Nadarajan, 2008). நிகழ் காலத்தில் இருந்து கொண்டு இறந்த காலத்தை நினைத்துப் பார்த்தல் என்னும் இவ்வுத்தி முறையைச் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் பயின்று வரக்காணலாம். நற்றிணையில் ஒரு தலைமகள் தலைமகனோடு கூடியிருந்த காலத்தில் தினைப்புனத்தை யானைகளோ கிளிகளோ அழிக்கவில்லை என்கின்றாள். ஆனால், தலைமகனைப் பிரிந்து இற்செறிக்கப்பட்டுள்ள நிலையில் யானைகளும் கிளிகளும் தினைப்புனத்தை அழிக்கின்றன என்கின்றாள். இக்கவிதை நனவோடையில் அமைந்துள்ளது. ஏனென்றால், ஊசலாட்டம் போல நிகழ் காலத்தில் இருந்து கொண்டு கடந்த காலத்தையும் எதிர் காலத்தை நினைத்துப் பார்க்கும் தலைமகளின் நிலை இதில் புலப்படுகின்றது. இதனை, அம்ம வாழி தோழி கைம்மாறு/ யாது செய்வாங் கொல் நாமே கயவாய்க்/ கன்றுடை மறுப்பின் பிடிபுணர்ந்து இயலும்/ வலனுயர் மருப்பின் நிலம் ஈர்த் தடக்கை/ அண்ணல் யானைக்கு அன்றியும் கல்மிசைத்/ தனிநிலை இதணம் புலம்பப் போகி/ மந்தியும் அறியா மரம்பயில் ஒருசிறை/ குன்றக வெற்பனொடு நாம் விளையாட/ இரும்புகவர் கொண்ட ஏனல்/ பெருங்குரல் கொள்ளாச் சிறுபசுங் கிளிக்கே (நற்.194) என்ற அடிகளில் மதுரை மருதனிளநாகனார் பதிவு செய்கின்றார். இதில் தலைமகளின் உள் மன எண்ணம் வெளிப்படுகின்றது.

## பின்னோக்கு உத்தி

பின்னோக்கு என்பது நடந்ததைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதாகும். இதில் குறிப்பிட்ட நினைவிலிருந்து காட்சிகள் பின்னோக்கிச் செல்வதாக அமையும். இவ்வுத்தியைச் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் காணலாம். தலைமகள் தோழிக்குச் சொல்வதாக அமைந்த குறுந்தொகைக் கவிதையில், யாரு மில்லைத் தானே கள்வன்/ தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ/ தினைத்தா ளன்ன சிறுபசுங் கால/ ஒழுகுநீ ராரல் பார்க்கும்/ குருகு முண்டுதான் மணந்த ஞான்றே (குறுந்.25) இதில் தலைமகன் என்னை மணந்தபோது அங்கு யாரும் இல்லை. அவன் கூறிய சூளுரையில் இருந்து தப்பினால் யான் என் செய்வேன்? என்று தோழியிடம் முன்பு நடந்த நிகழ்வை எடுத்துக் கூறுகின்றாள் தலைமகள்.

## காமம் மிக்க கழிபடர் கிளவி

இது காமம் மிகுந்த நிலையில் தலைமகள் அஃறிணை உயிர்களிடம் பேசுவதாகும். இது தலைமகளின் மனநிலையைத் தேற்றுவதற்கு யாருமில்லாத நிலையில் அஃறிணை உயிர்களிடம் தம் துன்பத்தைக் கூறி, தேற்றிக் கொள்வதாகும். இத்துறையைப் பற்றித் தமிழ் இலக்கணப் பேரகராதி விளக்கம் தருகையில், “வேட்கை மிகுந்த தலைவனைக் கூட விரும்பும் தலைவி, பெரிதும் துயருற்றுத் தலைவனை நினைந்து நினைந்து உருகிக் கடல், கானல், பொழில், விலங்கு, பறவை முதலியவற்றைப் பார்த்துக் கூறும் கூற்றுக்கள்” (Gopalaiyar, 2013) என்கின்றது. தனக்குத் தலைமகனிடம் காமம் மிகுதலால் விளைந்த நினைவால் உண்டான துன்பத்தைத் தலைமகள் அஃறிணை உயிர்களிடம் கூறுவதே காமம் மிக்க கழிபடர் கிளவி என்பதாகும். இதனைப் பிற்காலத்தில் தோன்றிய தூது இலக்கியங்களில் காணலாம். வரைவு வேண்டும் தலைமகள் விருப்பத்தோடு கிளியை நோக்கி, கிளியே! என் தலைமகன் நாட்டு மலைப்பக்கம் உள்ள உன்னுடைய சுற்றத்தாரைக் காணச் செல்லும்போது, என் தலைமகனையும்

கண்டு, இம்மலைக் குறமகள் தினைப்புனக் காவலுக்கு மீண்டும் வந்தனள் எனச் சொல்வாயாக என்று தலைமகள் கிளியிடம் இரந்து நிற்கும் நிலையை நற்றிணையில் காணலாம். கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி/ அஞ்சல் ஓம்பி ஆர்பதம் கொண்டு/ நின்குறை முடித்த பின்றை என்குறை/ செய்தல் வேண்டுமால் கைதொழுது இரப்பல்/ பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு/ நின்கிளை மருங்கின் சேறி யாயின்/ அம்மலை கிழவோற்கு உரைமதி இம்மலைக்/ கானக் குறவர் மடமகள்/ ஏனல் காவல் ஆயினள் எனவே (நற்.102).

## கைக்கிளை நிலை

அகத்திணைகளுள் ஒன்றாகக் குறிக்கப்படும் கைக்கிளையும் காமத்தின் நிலைமையைக் காட்டுகின்றது. இது இழிந்த பொருண்மையுடைய காதல் நிலையாகும். "காமம் அமையாத இளையாள்மாட்டு ஏமம் அமையாத இடும்பை எய்திப் புகழ்தலும் பழித்தலும் ஆகிய இருதிறத்தால், தனக்கும் அவட்கும் ஒத்தன புணர்த்துச் சொல்லெதிர் பெறானாய்த் தானே சொல்லி இன்புறுதல் பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு" என்று இளம்பூரணர் கைக்கிளைக்குத் தரும் உரை நினைத்தற்குரியது (தொல். பொருள். அகத். 53). காமம் சால இளமைக் காதல் பற்றிக் கலித்தொகைக் குறிப்பிடுகின்றது. வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோள்/பேரெழில் மலருண்கண் பிணையெழில் மானோக்கின்/ காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதல்/ கூரெயிற்று முகை வெண்பல் கொடிபுரை நுசப்பினளாய் (கலித்.58). இதில் ஓர் இளைஞனின் காதல் பதிவைக் காணலாம். ஆளாகாத ஒரு பெண்ணைக் குமரி எனக் கொண்டு காதல் கொள்ளும் செயல் குறிஞ்சி நிலச் சமூகத்தில் நிலவியது என்பதை அறியலாம். இந்நிலை தென்னிந்திய பழங்குடி மக்களிடையே காமம் சாலா இளமை மணம் வழக்கில் இருந்துள்ளதைப் பற்றிச் சிலம்பு நா.செல்வராசு குறிப்பிடும் கருத்து ஈண்டு நினைத்தற்குரியது. "தமிழகத்து நீலகிரியில் வாழ்பவர் தோடர் என்ற பழங்குடியினர் ஆவர். தோடர்கள் பெண் குழந்தை பிறந்த உடனே அப்பெண்ணுக்கென ஒரு பையனை அமர்த்தி விடுகின்றனர். இப்பையன் ஆண்டுதோறும் அப்பெண்ணுக்குக் கையுறை கொடுப்பான். அப்பெண் பருவம் அடைந்தவுடன் அப்பையனை மணந்து கொள்ளலாம். விரும்பாவிட்டால் வேறு ஆடவனையும் மணக்கலாம்" (செல்வராசு, சிலம்பு நா.2010:94) என்று தோடர் பழங்குடியினரிடையே நிலவிய செயலை எடுத்துக்காட்டுகின்றார்.

## காமத்தின் மிகுதி

காமத்தின் மிகுதியால் தலைமகனின் நனவு மனம் சிதைந்து (dissociation of Consciousness mind) விடுகின்றது. இதனால் அவன் மனதிற்குள் போராட்ட நினைவு மேலாங்குகின்றது. இதனால், என்ன செய்வதென்று தெரியாமல் மடலேறதலில் அவன் மனம் துணிகின்றது. இதனையே தொல்காப்பியர் 'பெருந்திணை' (தொல். பொருள். அகத். 54) என்பார். குறுந்தொகையில் (17) பேரெயின் முறுவலார், தலைமகன் காமத்தின் மிகுதியால் உலகத்தார் செய்வதைக் கூறித் தானும் அவ்வாறு செய்யத் துணிவேன் எனத் தோழியிடம் கூறுவதாகக் குறிப்பிடுகின்றார். இதனை, மாவென மடலு மூர்ப பூவெனக்/ குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப/ மறுகி னார்க்கவும் படுப/ பிறிது மாகுப காமம்காழ்க் கொளினே (குறுந்.17) என்ற அடிகளில் காணலாம். தலைமகனுக்கு மட்டுமின்றி, தலைமகளுக்கும் காம உணர்வு நாளுக்கு நாள் அதிகரிப்பதைத் தோழி தலைமகனிடம் கூறுகையில், சாரல்/ சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்/ உயிர்தவச் சிறிது காமமோ பெரிது (குறுந்.18) என்கின்றாள். இதில் தலைமகளின் காம உணர்வு, பலாக்கள் நாளுக்கு நாள் பருத்துக் கொண்டே செல்வதைப் போல அமைந்துள்ளது எனத் தலைமகனுக்கு எடுத்துக் கூறி, அவனை வரைவிற்குத் தூண்டுகின்றாள் தோழி. தொல்காப்பியம் பகரும் மடல்திறம் என்பது குறிஞ்சித்திணையின்கண் விரவி வந்துள்ளமையைக் காணலாம். வில்லாப் பூவின் கண்ணி சூடி/ நல்லே முறுவலெனப் பல்லூர் திரிதரு/ நெடுமாப் பெண்ணை மடன்மா னோயே/ கடனறி மன்னர் குடைநிழற் போலப்/ பெருந்தண் ணென்ற மரனிழற் சிறிதழிந்து/ இருந்தனை சென்மோ (நற்.146) இவ்வொழுக்கம் குறிஞ்சித்திணையின்கண் நிகழ்வதற்குக் காரணம், களவு நிகழ்ந்த வழிக் கற்பு நிகழ்தல் ஒருதலையாக நினைக்கப்பட்டு வந்த வழக்கமே ஆகும்.

## மன ஏக்கம்

தலைமகனைக் கண்ட தலைமகளின் மன ஏக்கத்தைக் கபிலர் அகநானூற்றில் பதிவு செய்கின்றார். தோழி! மலர் மாலை அணிந்த அழகிய தோற்றத்தோடு அன்று அவன் அங்கு நின்ற காட்சியைக் கண்டவர் பலர். அவர்களுள் யானும் ஒருத்தியாக இருந்தேன். ஆனால், மற்றவர்கள் வருந்தவில்லை. யான் மட்டும் நள்ளிரவிலும் படுக்கையில் கிடந்து தனியே கண்ணீர் சொரிந்து வாடுவதேன்? என்கின்றாள். அக்கவிதை வருமாறு:- மலர்தார் மார்பன் நின்றோன் கண்டோர்/ பலர்தில் வாழி தோழி அவருள்/ ஆரிருள் கங்குல் அணையொடு பொருந்தி/ ஓர் யான் ஆகுவது எவன் கொல்/ நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே (அகம்.82).

## பிரிவுத் துன்பமும் உடல் மெலிவும்

தலைமகளுக்குத் தலைமகனின் பிரிவாற்றாமையால் உடல் மெலிவு ஏற்படுகின்றது. அதைக் கண்டு தாய் வருந்துகின்றாள். தலைமகள் தன் தோழியிடம் பின்வருமாறு கூறுகின்றாள். தோழி! அன்னைக்கு உண்மையை அறிவிப்பதா? இல்லையா? என்று இரு பக்கமும் எண்ணி எண்ணித் தடுமாறிய மனம் இப்போது ஒரு முடிவுக்கு வந்தவிட்டது. என் உயிர் இந்த உடம்பில் இருந்து நீங்குவதாயினும் சரி, என் உடல் மெலிவிற்குக் காரணம் காதல் என்பதை மட்டும் அன்னைக்குக் கூறாதே என்று கூறுகின்றாள். இதனை, அகநானூற்றுக் கவிதை (52) ஒன்றில் காணலாம். அறிவிப்பேம் கொல் அறியலெம் கொல் என/ இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபால்/ சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை/ இன் உயிர் கழிவது ஆயினும் நின் மகள்/ ஆய்மலர் உண்கண் பசலை/ காம நோய் எனச் செப்பா தீமே (அகம்.52)

## நெஞ்சொடு கிளத்தல்

பிரிவுத் துயரத்தால் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறும் நிலையே நெஞ்சொடு கிளத்தலாகும். சங்கக் கவிதைகளுள் 117-கவிதைகள் நெஞ்சொடு கிளத்தல் தொடர்பானவை. அகநானூற்றில் 68 கவிதைகளும் நற்றிணையில் 24 கவிதைகளும் குறுந்தொகையில் 20 கவிதைகளும் ஐங்குறுநூற்றில் 3 கவிதைகளும் கலித்தொகையில் 2 கவிதைகளும் இத்துறையோடு தொடர்புடையவை. சங்கக் குறிஞ்சித்திணையை மையமாகக் கொண்ட 488-கவிதைகளுள் 30 கவிதைகள் இத்துறையைச் சார்ந்தவை. சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரையில் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறும் நிலையில் அமைந்த கவிதைகளே அதிகம் எனலாம். அந்த வகையில் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்வதாக 7-சூழல்கள் இனங்காணப்பட்டுள்ளன.

1. அல்ல குறிப்படுதல்
2. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குதல்
3. இரவுக்குறி வந்து நீங்குதல்
4. இடந்தலைப்படுதல்
5. ஆற்றானாகிச் சொல்லுதல்
6. தோழி செறிப்பறிவுறுப்ப நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லுதல்
7. வரைவுமறுக்கப்பட்டு ஆற்றானாகிச் சொல்லுதல்

இச்சூழல்கள் தலைமகனின் மனநிலைமையைக் காட்டுகின்றன. இவற்றுள் மனதின் உறுதியற்ற நிலையை, மயக்கத் தன்மையைக் காணலாம்.

சான்றாக ஒரு கவிதை வருமாறு:-

“ஒறுப்ப ஓவலை நிறுப்ப நில்லலை

புணர்ந்தோர் போலப் போற்றுமதி நினக்கியான்

கிளைஞன் அல்லனோ நெஞ்சே” (அகம்.342)

இக்கவிதை அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. நெஞ்சே! நான் உன்னை வன்சொல் கூறி ஒறுத்தாலும் ஒழியமாட்டாய். இன்சொல் சொல்லி நிறுத்தினாலும் நிற்க மாட்டாய். உனக்கு நான் உறவினன் அல்லனோ? உள்ளம் ஒன்றிய நண்பரைப் போல நான் கூறுவதைப் போற்றுவாயாக. என்றவாறு இக்கவிதை அமைகின்றது. இதில் தலைமகன் மனதின் உறுதியற்ற நிலைமையைக் காணலாம். தலைமகனின் பாலுந்து ஆற்றலே, தலைமகளை உடனே அடைய தோழியிடம் இரந்து நிற்கும் நிலைமைக்கு அவனைத் தள்ளுகின்றது. இது பற்றிச் செ.சாரதாம்பாள் குறிப்பிடுகையில், "இட் என்ற பண்படா உள்ளம் இன்ப உணர்வுகளுக்கு நிறைவு தேடுகின்ற தன்மையுடையது. இன்ப இயல்பூக்கங்களுக்கு உடனே நிறைவு அளித்தலே 'இட்டின்' இயல்பாகும்" (சாரதாம்பாள்,செ.2017:19,20) என்கின்றார். இங்குக் களவுக்காலத்தில் தலைமகளுடன் கூடியின்பந் துய்க்கும் பாலுணர்வே 'இட்' ஆக வெளிப்படுகின்றது.

## மடலேறுதல்

தலைமகன் தன் காதல் நிறைவேறாத பொழுது, அத்தலைமகளை எங்ஙனமேனும் அடைந்தே தீருவேன் என்ற தனது நோக்கினை வலிய நிறைவேற்ற எடுக்கும் முயற்சியே மடலேறுதலாகும் என்று விளக்குகின்றார் செ.சாரதாம்பாள் (சாரதாம்பாள்,செ.2017:47). இதில் தலைமகனின் மாறுபட்ட மனநிலையைக் காணலாம். தன்னை வருத்தியாவது தலைமகளைத் தலைமகன் அடைய முயல்கின்றான். குறுந்தொகையில் தலைமகன், தெற்றெனத் தூற்றலும் பழியே/ வாழ்தலும் பழியே (குறுந்.32) என்ற மனப்போராட்டத்தால் தவிக்கின்றான். இம்மனப் போராட்டத்தால் தலைமகன் காமநோய்க்கு அடிமையாகின்றான். இதனை, நாண் அட்டு/ பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப (குறுந்.173) என்ற அடிகளில் காணலாம்.

## பாலியல் துய்ப்பினை மறுத்தல்

சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதை ஒன்றில் (குறுந்.112) தலைமகள் பாலியல் இன்பத்தை மறுத்துரைப்பதைக் காணலாம். தலைமகன் களவொழுக்கத்தை நீட்டித்துக் கொண்டே இருக்கின்றான். இந்நிலையில் தலைமகள் தன் தோழியிடம் கௌவைக்கு அஞ்சினால் காமம் குறையும் காமம் குறைந்தால் நாணம் சிறக்கும். தலைமகன் விரும்பிய என் நலன் யானை வளைக்க, ஒடிந்த மரத்தைப் போன்றுள்ளது என்கின்றாள். இதனை, கௌவை அஞ்சிற் காம மெய்க்கும்/ மௌளற விடினே யுள்ளது நாணே/ கண்டிசிற் றோழியவ ருடைவென் னலனே (குறுந்.112) என்ற அடிகளில் காணலாம்.

## உணர்ச்சி

உணர்ச்சி என்பது மனநல செயல்பாட்டு அனுபவம் ஆகும். அதாவது, மனிதர் உணரும் சிந்தனைகளையே உணர்ச்சி (Emotion) எனலாம். அன்பு, கோபம், இன்பம், துன்பம், ஆசை, பொறாமை, வெறுப்பு, விரக்தி, அமைதி, அச்சம், கவலை, எதிர்பார்ப்பு, வெட்கம், இரக்கம் முதலியவை மனித உணர்ச்சிகளாகும். இவை மனிதனின் மனவெழுச்சியைத் தூண்டிவிடும் திறம் உடையவை. மனிதனிடம் காணப்படும் 32-உணர்ச்சிகளைத் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் கூறக்காணலாம். இவ்வுணர்ச்சிகள் எல்லாம் சங்க இலக்கியத்துள் திணைப் பின்புலம் சார்ந்து படைக்கப்பட்டுள்ளன.

## மகிழ்ச்சி

தலைமகன் வரைதல் வேண்டி வருவதைக் கண்டு தலைமகள் ஒருத்தி அடைந்த உவகையை ஐங்குறுநூற்றில் (202) காணலாம். அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்/ பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்/ குடுமித் தலைய மன்ற/ நெடுமலை நாட னூர்ந்த மாவே (ஐங்.202).

## கோபம்

ஐங்குறுநூறு 265-ஆம் கவிதையில் தலைமகளின் கோப உணர்ச்சியைக் காணலாம். பரத்தமை ஒழுக்கம் பூண்ட தலைமகன் வாயிலோரைத் தலைமகளிடம் தூது அனுப்புகின்றான். அவர்களிடம் தலைமகள் சினந்துரைக்கின்றாள். இதனை, குன்றுகெழு நாடன் மறந்தனன்/ பொன்போல் புதல்வனோ டென்நீத் தோனே (ஐங்.265) என்ற அடிகளில் காணலாம். தலைமகன் பொன் போன்ற புதல்வனோடு என்னையும் விட்டுப் பிரிந்து சென்றான். அவனுக்காக வாயில் வந்த நும்முடைய அறிவுதான் என்னே! என்று தலைமகள் தனது வெறுப்பை வெளிப்படுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது.

## அச்சமும் கழிவிரக்கமும்

தலைமகள் தோழியின் வாயிலாகத் தலைமகனை இரவில் வருமாறு தூண்டுகின்றாள். பின்பு, அவன் வரும் வழியின் ஏதம் கண்டு அஞ்சி, தான் செய்த தவற்றை எண்ணிப் பார்த்துக் கழிவிரக்கம் கொள்கின்றாள். இதனை, அருள்புரி நெஞ்சமொடு எஃகுதுணை யாக/ வந்தோன் கொடியனு மல்லன் தந்த/ நீதவ றுடையையும் அல்லை நின்வயின்/ ஆனா அரும்படர் செய்த/ யானே தோழி தவறுடை யேனே (அகம்.72) என்ற அடிகளில் காணலாம்.

## நகையும் நனவிலி மனமும்

நகைச் சுவை உணர்வு மனித இனத்திற்கே உரிய உணர்ச்சியாகும். நகைச்சுவை என்பது அன்றாட உளநோய்க்குறி (Psycho Pathological Symptom) போன்றது. நனவிலிக்குள் சிக்கலாகிப் போன உணர்ச்சிகள் நோயாக மாற்றம் பெற்று நடைமுறை வாழ்வில் கூடச் சில குறிகள் வழி வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் நகைச்சுவை உணர்ச்சி என்பது ஃப்ராய்டின் அடிப்படை வாதமாகும். அமுக்கப்பட்ட வேட்கைகள் தருகிற துன்பத்தில் இருந்து விடுபட நகைச்சுவையினைக் கூறுவதன் வழி அதலிருந்து விடுபட்டுக் கொள்கின்றது (இரவிச்சந்திரன்,தி.கு.2011:57). சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில், மில்லோர் பெருநகை காணிய சிறிதே (குறுந்.111:7), நகைநீ கேளாய் தோழி அல்கல் (அகம்.248:1) என்ற அடிகளில் நகை உணர்ச்சி வெளிப்படுவதைக் காணலாம். இங்கு நனவிலிக் கூறுகள் வெளிப்படுகின்றன. மேலும் இன்பத்தைப் பெற வேண்டிப் பயன்படுத்துகின்ற ஒரு வகைமையாக இதனைக் குறிப்பிடலாம்.

## தோழியின் ஆளுமை வெளிப்பாடு

ஆளுமை (Personality) என்பது தனி மனிதனுடைய எண்ணம், மனப்பான்மை, அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகியவற்றைக் குறிக்கும். யுங் என்ற உளவியலார் ஆளுமையுடைய மனிதரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சங்கக் குறிஞ்சித்திணையில் இடம்பெறும் கவிதைகள் வழித் தோழியின் ஆளுமைப் பண்புகளை இரு நிலைகளில் காணலாம். அவை:-

1. குறிப்புப் பொருளால் உணர்த்தும் திறம்
2. சூழ்நிலைக்கு ஏற்றபடி விழிப்பாக இருக்கும் திறம் என்பன.

## குறிப்புப் பொருளால் உணர்த்தும் திறம்

“மென்தினை மேய்ந்த தறுகண் பன்றி

வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்

எந்தை அறிதல் அஞ்சிக்கொல்

அதுவே மன்ற வாரா மையே” (ஐங்.261)

என்ற கவிதையில் தோழி, நேற்றிரவு குறியிடத்திற்கு வாராமைக்குக் காரணம், நம் தந்தை அறியின் அதனால் வரும் துன்பம் குறித்த அச்சமாக இருக்குமோ என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றாள்.

## சூழ்நிலைக்கு ஏற்றபடி விழிப்பாக இருக்கும் திறம்

தலைமகளின் உடல் வேறுபாடு கண்டு வருந்திய தாய் அந்நோய்க்குக் காரணம் அறியாதவளாய் வெறியாட்டு எடுக்க முற்படுகின்றாள். அம்முயற்சியைக் கைவிட்டு, உண்மையை உணரும் பொருட்டு, தோழி தாயிடம் பின்வருமாறு கூறுகின்றாள்.

“அம்ம வாழி தோழி பலமலர்

நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை

குன்றம் பாடா னாயின்

என்பயம் செய்யுமொ வேலற்கு வெறியே” (ஐங்.244)

## ஆக்கம் பெறல்

ஒரு செயலை மேற்கொள்வதற்குப் பண்டைய காலத்தில் விரிச்சி பெற்றுச் செல்லும் வழக்கம் இருந்தமையை அறிகின்றோம். அவ்வாறு விரிச்சி கேட்டலின் நோக்கம் வினை நன்முறையில் கிட்டும் என்னும் நம்பிக்கையே ஆகும். களவு வாழ்க்கையில் இவ்விரிச்சி கேட்டல் மனதிற்கு ஒருவகையான ஆக்கத்தைத் தருகின்றது எனலாம். நற்றிணை 98 இல் பன்றி விரிச்சி பெற்று ஆக்கம் எய்திய நிகழ்வை எடுத்துரைக்கின்றது. ஒருநாள் ஒரு பன்றி தினைக்கதிர்களை மேயும் பொருட்டுத் தினைப்புனம் நோக்கி வந்துகொண்டிருந்தது. கானவர்கள் தினைப்புனத்தைக் காக்கும் பொருட்டுப் பொறிகளை அமைத்து வைத்துள்ளனர். அப்போது அங்கு வந்த பன்றி அதனை அறியாது பொறி வைக்கப்பட்டிருந்த புழை வழியே சென்றது. அச்சமயம் பல்லி ஒன்று இடைவிடாது குரலை எழுப்பியது. அதனைக் கேட்ட பன்றி அவ்விடம் செல்லாது தனக்குத் துன்பம் ஏற்படும் என்று அஞ்சி மெல்ல மெல்ல பின்னே சென்று மீண்டும் தன் இருப்பிடத்திற்கு வந்தது. இது பன்றி விரிச்சி பெற்று ஆக்கம் எய்தியமையைக் காணலாம். இது இயற்கையாக விரிச்சி பெற்று ஆக்கம் பெற்றமையைக் காட்டுகின்றது. இதனை, எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருத்தின்/ செய்யும் மேவல் சிறுகட் பன்றி/ ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி/ நூழை நுழையும் பொழுதில் தாழாது/ பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென/ மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து தன்/ கல்லளைப் பள்ளி வதியும் (நற்.98) என்ற அடிகளில் காணலாம். இதில் அமைந்த உள்ளுறை இரவுக்குறி வந்த தலைவனைத் தோழி வரைவுகடாயதாக அமைந்துள்ளது. அதாவது வரைதல் வேட்கையில்லாமல் வந்தொழுகும் தலைமகன், தலைமகளின் காவல் மிக்க மாளிகையினுள் நுழைய முயலும்போது, காவலர் வரவாலும் நிலவு வெளிப்படுவதாலும் இது தக்க பொழுது அல்ல என்று கருதி திரும்பிச் செல்கின்றான். இந்நிகழ்வினை உக்கிரப்பெருவழுதி என்ற மன்னர் பன்றியின் செயல் வழியாகக் குறிப்பிட்டுள்ளார்.

## உணர்ச்சி மோதல்கள்

மனித வாழ்க்கையில் உணர்ச்சி மோதல்கள் தவிர்க்க முடியாததாக அமைகின்றன. குடும்பத்தில் இருவருக்கிடையே, சமூகத்தில் இரு இனங்களுக்கிடையே, நாட்டில் இரு மதங்களுக்கிடையே, உலகத்தில் இரு நாடுகளுக்கிடையே உணர்ச்சி மோதல்கள் ஏற்படுகின்றன என்று அ.பிச்சை (பிச்சை, அ.2019:256) உணர்ச்சி மோதல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். குறிஞ்சிக்கலியில் வரும் ஒரு தலைமகள் தன் நெஞ்சை நோக்கிக் கூறி உணர்ச்சி மோதலில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்கின்றாள். தலைமகள் தோழியிடம் படைத்து மொழிவது போல இளைஞனின் காதல் மனப்பாங்கை விவரித்துக் கூறி, இறுதி முடிவைத் தன் நெஞ்சை நோக்கிக் கூறி, தான் மனக்குழப்பத்தை நீக்கிக் கொள்கின்றாள்.

இதனை, நாண்அடப் பெயர்த்தல் நமக்கு ஆங்கு ஒல்லாது/ பேணினர் எனப்படுதல் பெண்மையும் அன்று அவன்/ வெளவினன் முயங்கும் மாத்திரம் வா எனக்/ கூறுவென் போலக் காட்டி/ மற்று அவன் மேஎவழி மேவாய் நெஞ்சே (கலித்.47:20-24) என்ற அடிகள் உணர்த்துகின்றன.

குறிஞ்சிக்கலியில் தோழி வாயிலாக வந்து தலைமகன் - தலைமகளுக்கிடையே உள்ள பிரிவைப் போக்கி, அவர்களுக்கிடையே பிணைப்பை ஏற்படுத்துகின்றாள். குறிஞ்சிக்கலியில் உள்ள 1 முதல் 10 வரையிலும் உள்ள கவிதைகள் இத்தன்மையுடையன. தலைமகனின் நடத்தை தலைமகளுக்கு நகைப்பை உண்டாக்குவதாகவும் தலைமகளின் அழகு அவனுக்கு மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தி மன அமைதியைச் சிதைக்கின்றது. இதனை, நீயும் தவறில்லை நின்னைப் புறங்கடைப்/ போதர விட்ட நுமரும் தவறில்லர்/ நிறை அழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்/ பறை அறைந்தல்லது செல்லற்க என்னா/ இறையே தவறுடை யான் (கலித்.56:30-34) என்ற அடிகளில் காணலாம். இதில் தலைமகள் தன் மனத்திற்குச் சமாதானம் சொல்லிக் கொள்வதைக் காணலாம். இது பற்றித் தி.கு.இரவிச்சந்திரன் குறிப்பிடுகையில், “அழகு பொருட்கள் நம்முள் வேட்கையை உண்டு பண்ணுகின்றன. வேட்கை நமது மனதில் துன்பத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, அழகு துன்ப உணர்வுடன் தொடர்புடையதாகிறது. அழகை வேட்கையின் பொருள் என்றுதான் லக்கான் குறிப்பிடுவார்” (இரவிச்சந்திரன்,தி.கு.2019:13) என்கின்றார். எனவே, இக்குறிஞ்சித்திணைக் கவிதையிலும் தலைமகளின் அழகு தலைமகனுக்குத் துன்பத்தைத் தருவதை வெளிப்படுத்துகின்றது.

## மனப்போராட்டம்

குறிஞ்சிக்கலியில் தோழியின் கூற்றில் அமைந்த 49-ஆம் கவிதையில் தலைமகளைத் தலைமகன் இரவில் சந்திக்க வருகின்றான். அவ்வரவு அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் அவன் வரும் வழியிடை அவனுக்கு ஏற்படும் இன்னல்களை நினைத்து வருந்துகின்றாள் தோழி. இதனைக் கபிலர், காதலை என்பதோ இனிதுமற் றின்னாதே (கலித்.49:11)/ அன்பினை என்பதோ இனிதுமற் றின்னாதே (கலித்.49:15)/ அருளினை என்பதோ இனிதுமற் றின்னாதே (கலித்.49:19) என்ற அடிகளில் பதிவு செய்கின்றார். இத்தகைய காதலை, அன்பினை, அருளினை உடைய நீ கூறும் சொற்கள் இனிமையுடையனவாக உள்ளன. ஆனால், நீ தலைமகளைச் சந்திக்க வருகின்ற இரவுப் பொழுதினை நினைந்து அச்சமாக இருக்கின்றது என்கின்றாள் தோழி என்பதைக் கபிலர் எடுத்துக்காட்டுகின்றார். தலைமகளின் மனதில் இனிமையும் இன்னாமையும் ஏற்பட்டுப் போராடுவதைத் தோழி தலைமகனிடம் உரைக்கின்றாள்.

## மன இறுக்கம்

மனப் போராட்டங்களை மறைத்து அடக்குவதால் மன இறுக்கம் எனும் கவலை தோன்றும் என்று உளவியலார் குறிப்பிடுவர். இந்த மன இறுக்கத்தால் அச்சம், குற்றவுணர்வு, வெட்கம், துயரம், துன்பம் ஆகியவை வெளிப்படுகின்றன. துயரத்தால் ஏற்பட்ட மன இறுக்கத்தை நற்றிணை 75 ஆம் கவிதை காட்டுகின்றது. மனமே நீ நீண்ட தூரம் சென்றுவிட்டாய். இத்தொலைவு வந்த பின்பும் கூட நீ மீண்டும் தலைமகளை நினைத்து மீண்டும் செல்வாய் என்றால் உன் முயற்சி நல்லதாகும் என்று தலைமகன் தன் நெஞ்சை விளித்து வெறுப்புற்றுக் கூறுகின்றான். அவ்வாறு செல்லும் நெஞ்சம் பிழைக்குமாறு தலைமகளின் பார்வை அமைய வேண்டும். இன்றேல் என் உள்ளம் உடையும் என்கின்றான். இவ்வாறு கூறுவதால் தலைமகன், துயரத்தால் மன இறுக்கம் அடைந்துள்ளமையை அறியலாம். இதனை, நயன் இன்மையின் பயன் இது என்னாது/ பூம்பொறிப் பொலிந்த அழல்உமிழ் அகன்பை/ பாம்பு உயிர் அணங்கியாங்கும் ஈங்கு இது/ தகாஅது வாழியோ குறுமகள் நகாஅது/ உரைமதி உடையும் என் உள்ளம் (நற்.75) என்ற அடிகளில் மாமூலனார் காட்டியுள்ளார். இது உளவியல் அறிஞர் ப்ராய்டு குறிப்பிடும் மன அழுத்தத்தைக் குறிக்கின்றது. அதீத எதிர்ப்பார்ப்பு அதீத ஏமாற்றத்தைக் கொடுக்கும். அப்போது மனம் தாங்காமல் வாடும் (இரவிச்சந்திரன்,தி.கு.2019:158) என்ற தி.கு.இரவிச்சந்திரனின் கூற்று இவண் நினைக்கத்தக்கது.

## ஒழுக்கம் எனும் தனிமனித விழுமியம்

ஓர் ஆடவனைப் பற்றிய பெண்ணின் மனப் பதிவு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்த உளவியல் வெளிப்பாட்டை நற்றிணையில் காணலாம். நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்/ என்றும் என்தோள் பிரிபு அறியலரே/ புரையோர் மன்ற புரையோர் கேண்மை (நற்.1) என்று தலைமகள் தோழிக்குத் தலைமகனின் சிறப்பைக் கூறுவதிலிருந்து ஒருவரைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் நல்லெண்ண உளவியல் அவசியம் என்பதை அறியலாம்.

## இறுவாய்

புணர்ச்சி என்ற உரிப்பொருளை மையமாகக் கொண்ட கவிதைகளே சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகள். இக்கவிதைகளில் விலங்கு, பறவைகளின் செயல்பாடுகள் வழி மனித நடத்தைகள் புனையப்பட்டுள்ளன. தலைமகளின் அச்சம் கலந்த பாலியல் உணர்வினையும் தலைமளுக்குக் கனவின் வழி வெளிப்படும் பாலியல் உணர்வினையும் தலைமகனின் பிரிவினால் தலைமகளுக்கு உண்டாகும் உடல் மெலிவினையும் சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் சித்திரித்துள்ளன. மடலேறுதல், கைக்கிளை நிலை, காமம் மிக்க கழிபடர் கிளவி ஆகியவை காமத்தின் மிகு நிலையைக் காட்டுகின்றன. சங்கக் குறிஞ்சித்திணையில் ஆளுமை உடைய பாத்திரமாகத் தோழி படைக்கப்பட்டுள்ளாள். இவள் தலைமகளின் களவொழுக்கத்தை அவள் கூறாமலேயே குறிப்பால் அறியும் திறமுடையவளாகவும் அவ்வொழுக்கத்தை அறத்தொடு நிற்றல் மூலமாகத் தாய்க்கு எடுத்துக் கூறும் திறமுடையவளாகவும் திகழ்கின்றாள். மேலும், தலைமகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் மன ரீதியான சிக்கல்களை போக்கும் இயல்புடையவளாக (அதாவது மனநல மருத்துவரைப் போன்று) விளங்குகின்றாள். நெஞ்சொடு கிளத்தல் தொடர்பான சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் உளவியலார் கூறும் இட் கொள்கையும் லக்கான் குறிப்பிடும் 'Other' என்ற கொள்கையும் தொடர்புடையனவாக அமைகின்றன. காரணம், இதில் நெஞ்சம் (Capital 'O') என்பது அகநிலையில் உள்வாங்குவதையும் பிறர் என்பது புறத்தில் உள்ளவரையும் குறிக்கும். மனநலச் செயல்பாட்டின் அடிப்படைகளாக உள்ள மகிழ்ச்சி, கோபம், அச்சம், நகையாடல் உள்ளிட்ட உணர்ச்சிகள் நனவிலி மனத்தின் காரணமாகத் தன்னை வெளிப்படுத்துகின்றன. மனவெழுச்சி அளவு கடந்து போகும்போது உணர்ச்சி மோதல்கள் ஏற்பட்டு மன அழுத்தத்தைத் தரும். அதனை யாரிடமாவது கூறி, அந்த உணர்ச்சிகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். இதில் நெஞ்சொடு கிளத்தல் என்ற துறையில் அமைந்த கவிதைகள் அடங்கும். மேலும், தலைமகன் - தலைமகளுக்கிடையே ஏற்படும் மனப்பிணக்கைத் தீர்ப்பவளாகத் தோழி விளங்குகின்றாள் என்பதைச் சங்கக் குறிஞ்சித்திணைக் கவிதைகள் புலப்படுத்துகின்றன.

## References


Amutha, M. (2014) Sanga Aga Ilakiyathil Vayil Thuraipadalkal – Ulaviyal Nookku, Kavya Publication, Chennai, India

Gopalaiyar, T.V. (2013) Tamil Ilakana peragarathi, Tamilman Pathippgam, Chennai, India

Mariya Sepasthiyan, A. (2013) Tamilarin Paliyal Muraimagal, New Century Book House, Chennai, India

Nadarajan, T.S. (2008) Thiranaivukalai (Kolkaikalum Payilmuraikalum), New Century Book House, India

Ravichandran, T.K. (2015) Sigmund Freud Ulappaguppaaivu Arivak, Alaigal Pathippagam, Chennai, India

Saradhambal, S. (1999) Freudin Kanavu Kolkaikalum Silambil kanavum, Tamiliyal AIvu Thoguthi 2, Madurai, India

Saradhambal, S. (2017) Ilakiyamum Ulapagupaivum (KOlkaikalum Pathilmuraikalum), New Century Book House, India

Seenisami, D. (2004) Tamil Navalkalil Ulachitharipu, Tamil University, Tanjavur, India

Thiyagarajan, P. (2012) Sanga Kurunchithinai Padalkal, Meyyapan Pathippagam, Chidambaram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License